செ.வெ.எண்.08 நாள்:04.01.2018

# பத்திரிக்கை செய்தி

## தேசிய தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம்.

தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் இந்தியாவில் கடந்த 22 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து செயல்படுத்துவதன் காரணமாக இந்தியாவில் கடந்த 7 ஆண்டுகளாக தொடர்ந்து போலியோ நோய் தாக்கம் இல்லாமல் உள்ளது. இனிவரும் காலங்களிலும் இந்தியாவில் போலியோ நோய் பாதிப்பு இல்லாத உலகம் உருவாக்க தொடர்ச்சியாக 2018ம் ஆண்டில் முதல் தவணையாக கடந்த 28.01.2018 ஞாயிற்றுகிழமை சொட்டு மருந்து முகாம் சிறப்பாக நடைபெறவுள்ளது. இதில் திருநெல்வேலி மாவட்டத்தில் இம்முகாமின் மூலம் 2,64,360 குழந்தைகள் பயன்பெறவுள்ளனா். இரண்டாவது தவணையாக வருகின்ற 11.03.2018 ஞாயிற்றுகிழமையும் அன்று சொட்டு மருந்து முகாம் நடைபெற உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கிராமபுற பகுதிகளில் 1,496 மையங்களிலும் நகர்புறங்களிலும் 150 மையங்களிலும் அனைத்து பேருந்து நிலையங்களிலும், இரயில் நிலையங்களிலும் , இடம்பெயர்ந்து வாழும் கட்டிடத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் மற்றும் செங்கல் சூளைகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் 20 நடமாடும் மருத்துவ குழுக்கள் மூலம் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளன. மேற்கண்ட மையங்களில் 0 முதல் 5 வயதுக்குட்பட்ட சுமார் 2.64 லட்சம் குழந்தைகளுக்கு தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் புறவழிச்சாலை, சுங்கச்சாவடிகள், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமணைகள் ஆகியவற்றிலும் முகாம் அமைக்கப்பட்டு 0 முதல் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் விடுபடாமல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இப்பணியில் மருத்துவத்துறை சார்ந்தவர்கள் 1200 பணியாளர்களும், கல்வி துறைச்சார்ந்தவர் 305 நபர்களும், சத்துணவுப் பணியாளர்கள் 3,189 நபர்களும், ரோட்டரி குழுவைச் சார்ந்தவர்கள் 30 நபர்களும், தன்னார்வ தொண்டு நிறுவனத்தைச் சார்ந்த 2,255 நபர்களும் என மொத்தம் 6,979 பணியாளர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் போலியோ சொட்டு மருந்து முகாமில் கலந்து பணியாற்றுகின்றனர்.

ஆகவே பொதுமக்கள் தாய்மார்கள் அனைவரும் 28.10.2018 மற்றும் 11.03.2018 ஆகிய இரண்டு நாட்களிலும் தங்களுடைய 5 –வயதிற்குட்ப்பட்ட குழந்தைகளை அருகில் உள்ள போலியோ சொட்டு மருந்து வழங்கும் மையங்களுக்கு அழைத்துச் சென்று தங்களுடைய குழந்தைகளுக்கு தவறாமல் போலியோ சொட்டு மருந்து பெற்றுக் கொள்ளுமாறும், போலியோ இல்லாத உலகம் படைப்பதற்கு அனைத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து தேசிய பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் சிறப்பாக செயல்பட ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.